


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.11.2024) திருச்சி மாவட்டம், துறையூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வின்போது கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, சீ.கதிரவன், இரா.மாணிக்கம், எம்.பிரபாகரன், துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி. நீலமேகம், மேயர் மு.அன்பழகன் (திருச்சி), மாவட்ட செயலாளர்கள் க.வைரமணி (திருச்சி மத்தியம்), வீ.ஜெகதீசன் (பெரம்பலூர்), கே.கே.செல்லபாண்டியன் (புதுக்கோட்டை வடக்கு) கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## எந்த மாநிலத்திலும் வெற்றி வந்தால் என்ன,

# தமிழ்நாடு என்றுமே திராவிட இயக்கத்தின் பக்கம்தான்!

### ‘கலைஞர் 100’ வினாடி வினா இறுதிப் போட்டி பரிசளிப்பு விழாவில் – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி பேச்சு!

**சென்னை, நவ. 25 -**

**எந்த மாநிலத்திலும் வெற்றி வந்தால் என்ன, தமிழகம் என்றுமே திராவிட இயக்கத்தின் பக்கம்தான் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.**

தி.மு.க. மகளிர் அணி மற்றும் கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், திராவிட இயக்க வரலாற்றையும் கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் நடைபெறும் ‘கலைஞர் 100 வினாடி வினா’ போட்டியின் இறுதிப் போட்டி சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில், திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

இந்த விழாவில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி., கலைஞர் 100 வினாடி வினா போட்டியில், வெற்றி பெற்றவர்களுக்குத் திராவிட நட்சத்திரம் என்று அழைக்கப் போகிறோம். இந்த திராவிட நட்சத்திரங்களுக்குப் பரிசளிப்பதற்குத் திராவிட சூரியனே நம் நிகழ்ச்சிக்கு வந்து கலந்து கொண்டுள்ளார். அந்த திராவிட சூரியனுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அறிவை வளர்க்கக் கூடிய இயக்கம்!**

இந்த வினாடி வினா நிகழ்ச்சி என்பது நம்முடைய அறிவை வளர்த்துக் கொள்வதற்காக நடத்திக் கொண்டிருக்க கூடிய ஒரு நிகழ்வு. திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட இயக்கம் இரண்டும் அறிவை வளர்க்கக்கூடிய ஒரு இயக்கம். அதனால்தான் அறிவியல் பூர்வமாக மக்கள் சிந்திக்கக் கூடிய ஆற்றலை வளர்க்க வேண்டும் என நினைக்கிறோம். ஒரு சிலரைபோல அம்பானி, அதானியை வளர்வதற்காகக் கட்சி நடத்துவதில்லை.

திராவிட இயக்கம் என்பது மக்களுக்குக் கல்வி போய்ச் சேர வேண்டும், சுயமரியாதை போய் சேர வேண்டும் என்ற நோக்கத்தோடும், அனைவருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட இயக்கம். அதற்காகத்தான் தந்தை பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் போராடியது.



பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கி தலைவர் கலைஞர் வரை, எத்தனையோ கல்லூரிகளைத் திறந்தார்கள். பெண்கள் கல்வி பெறுவதே சிரமமாக இருந்த காலகட்டத்தில் பத்தாவது வரையிலாவது படிக்க வேண்டும் என்பதற்காக படித்தால் திருமணத்துக்கு நாங்கள் திருமண உதவித் தொகை தருகிறோம் என அறிவித்தார். இதன்முலம் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு கல்லூரியில் பெண்கள் எந்த தடையும் இல்லாமல் படிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய முதலமைச்சர் புதுமைப் பெண் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதுதான் தொடக்கத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கக் கூடிய திராவிட மாடல் ஆட்சி. திராவிட இயக்கத்தின் சாதனைகள், பணிகள் என்பது அடுத்த தலைமுறைக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக முன்னெடுக்கப்பட்ட ஒரு நிகழ்வுதான் கலைஞர் 100 வினாடி வினா போட்டி.

எந்த மாநிலத்தில் யார் வெற்றி பெற்றால் என்ன, தமிழகம் என்றுமே திராவிட இயக்கத்தின் கையில்தான் இருக்கிறது. ஜனநாயகத்தின் கடைசி அரணாகத் தொடர்ந்து இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு. அது எப்போதும் நிற்கும் என்பதை இந்த உலகத்திற்கு எடுத்துக்காட்டக்கூடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இந்த மண்ணை, நாட்டை காப்பாற்றக் கூடியவர்கள் தமிழர்கள் தான் என்று பேசினார்.

18 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் முதல் பரிசு பெற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கபிலன், உதயகுமார், நரேஷ் குமார்; இரண்டாவது பரிசு பெற்ற விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயபாலன், சோஃபியா, மோகன்ராஜ்; மூன்றாவது பரிசு பெற்ற சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மோகன், தியாகராஜன், மாதவி நாகமுத்து; நான்காவது பரிசு பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கதிர்வேல், லட்சுமி, தீரமகாராஜன் வெற்றி பெற்றனர்.

அதேபோல், பதினெட்டு வயதுக்குட்பட்டோர் பிரிவில் முதல் பரிசு பெற்ற மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த வள்ளிக் கண்ணு, சித்தி ஃபர்விஷா, தர்ஷினி; இரண்டாம் பரிசு பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நிதின் தங்கேஷ், அஜித்குமார், ஷேக் அமீன்; மூன்றாம் பரிசு பெற்ற சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ரஞ்சனா, ராஜஸ்ரீ, ஸ்ரீநதியா; நான்காம் பரிசு பெற்ற திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த கோபிகா, வெண்ணிலா, வேல்முருகன் வெற்றி பெற்றனர்.

இந்த போட்டியில் முதலிடத்தைப் பிடிக்கும் அணிக்கு 10 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், இரண்டாம் பரிசு 6 லட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசு 3 லட்சம் ரூபாயும், நான்காம் பரிசு 1லட்சம் ரூபாயை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி கௌரவித்தார்.

---

டாக்டர் ப. சேகர் வரவேற்புரை! செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமை!

## திண்டிவனத்திற்கு வருகை தரும் முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு!

### வடக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் முனைவர் க.பொன்முடி சிறப்புரை!

*திண்டிவனம் நவ 25-*

விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பளிப்பது உள்ளிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் திண்டிவனத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அவை தலைவரும் ,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார். மாவட்டத் துணைச் செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், அருணகிரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளர், வனத்துறை அமைச்சர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் க. பொன்முடி பேசுகையில்:

விழுப்புரம் மாவட்டம் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியாரின் கோட்டையாக என்றைக்கும் திகழ்ந்து வருகிறது மேலும் ஒரே மாதத்தில் துணை முதல் அமைச்சரும், தமிழ்நாடு முதலமைச்சரும் வருவது விழுப்புரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் நவம்பர் 28.29 ஆகிய இரு தினங்களில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகளிலும், அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார் அந்த வகையில் நவம்பர் 28ஆம் தேதி மாலையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட - தெற்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் திண்டிவனத்தில் நடைபெறுகிறது.கூட்டத்தில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார் .இதை தொடர்ந்து நவம்பர் 29ஆம் தேதி விழுப்புரத்தில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரை ஆற்றுகிறார். கட்சி நிகழ்ச்சி மற்றும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஹோட்டல் ஆரியாஸ் எதிரில் சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும்,தொடர்ந்து ஹோட்டல் ஆரியாஸ்லிருந்து திமுக நிர்வாகிகள் கூட்டம் நடைபெறும் ஜே.வி. எஸ் திருமண மஹாலில் வரையில் சென்னை தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் திமுகவினர் கைகளில் இரு வண்ண கொடியினை ஏந்தி உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை இளைஞர் எழுச்சி நாளாகவும்,விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் ஊராட்சிகளில் கழக இருவண்ண கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கியும்,ரத்ததான முகாம்களை நடத்திடவும், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கியும், ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி டிசம்பர் மாதம் முழுவதும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என அமைச்சர் டாக்டர் க. பொன்முடி வேண்டுகோள் விடுத்தார்.

மாவட்ட பொருளாளர் ரமணன் தீர்மானங்களை வாசித்தார்.

முன்னதாக மறைந்த மத்திய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறனின் 21 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு அமைச்சர் க. பொன்முடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், புஷ்பராஜ், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா,செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனிராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன்,மணிவண்ணன், பாலகிருஷ்ணன், வீடுர் ரவி, சாந்தி ஏழுமலை ,செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜாராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜய ராகவன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த்,எம். எல். பி .கோபிநாத், ராஜ சக்தி,,கே செந்தில் குமார் , ப.செந்தில் குமார், டாக்டர்கள் அசோக், சக்தி பிரியன்,கோ. தமிழரசன்,திருமலை, தங்கராஜ் ஊரல் அண்ணாதுரை, விஜயராகவன்,சந்திரன், செந்தில் முருகன், ரவிச்சந்திரன், ரோமியன், காதர் நவாஸ் , திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பா ளர்கள் டி .கே. பி ரமேஷ் விஜயகுமார், அண்ணாமலை,உதயகுமார்உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் நன்றி கூறினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் மாவட்ட அவைத் தலைவரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்ற திமுக மாவட்ட அவசர செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளர் – வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி சிறப்புரையாற்றினார்.உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், புஷ்பராஜ் ,மாவட்ட பொருளாளர் ரமணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.